When only
The best is
Good Enough

Buy
'Solide Pumps

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/=

தரமானதே சிறந்தது என்றால்

சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆனி மீ 06 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 05 ( 20 – 06 – 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 110

அமைதி, பேச்சுவார்த்தையை வலியுறுத்தி

# வவுனியாவிலும் ஆட்சேபப் பேரணி

## பதற்றச் சூழ்நிலையிலும் பல்லாயிரம் மக்கள் பங்கு

— உதயன் வவுனியா பாவட்டச் செய்தியாளர் —

வவுனியா, ஜூன் 20

அமைதி, சமாதானம், பேச்சுவார்த்தை என்பனவற்றை வலியுறுத்தி வவுனியாவில் சனிக்கிழமை பிரமாண்டமான ஆட்சேபப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

வெள்ளிக்கிழமை இரவுச் சம்பவங்களைத் தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை காணப்பட்டாலும், ஆயிரக்கணக்கான மக்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

பொது ஸ்தாபனங்கள் ஏற்பாடுசெய்த இந்தப் பேரணியை தொடர்ந்து இந்திய அமைதிப் படை அதிகாரிகளிடம் நீண்ட மகஜர் ஒன்று கையளிக்கப் பட்டது.

வவுனியாவின் பொது நல அமைப்புக்கள் அமைதி, சமாதானம், பேச்சுவார்த்தை என்பவற்றை வலியுறுத்தி ஆட்சேபப் பேரணி ஒன்றை நடத்தின. பேரணியில் ஏழாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். பேரணி சுமார் 3 மைல் தூரம் நீண்டிருந்தது.

பாடசாலை மாணவர்கள், ஆண்கள், பெண்கள் உட்படப் பல தரப்பினரும் பேரணியில் கலந்துகொண்டனர்.

வவுனியா–மன்னார் வீதி நெலுக்குளம் சந்தியில் காலை 10 மணியளவில் ஆரம்பித்த இந்தப் பேரணி குருமண்காடு தடைமுகாமிற்குப் பதினொன்றரை மணிக்குப் பின்னரே வந்து சேர்ந்தது.

வெள்ளி இரவு வவுனியா நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு, குடியிருப்புப் பிள்ளையார் கோவிலடி துப்பாக்கிப் பிரயோகம் போன்ற அசம்பாவித சம்பவங்கள் காரணமாக பெரும் பதற்றம் நிலவியது.

அதனால் வவுனியா நகரில் அசம்பாவிதம் ஏதும் நிகழக்கூடும் என்ற காரணத்தினால் அதனைத் தவிர்ப்பதற்காகப் பேரணியில் வந்த பொதுமக்கள் கொண்டுவந்திருந்த மகஜரைக் கையேற்பதற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

நடேஸ்வராக் கல்லூரி முகாம்

## அகதிகளின்பொதிகளினல் நிரம்பி வழிந்தது!

காங்கேசன்துறை, ஜூன் 20

தமிழ் நாட்டிலிருந்து காங்கேசன்துறை வந்த அகதிகளின் பொதிகளினல், நடேஸ்வராக் கல்லூரியிலுள்ள தற்காலிக முகாம் நிரம்பி வழிந்தது.

தமிழ் நாட்டிலிருந்து இலங்கை அகதிகள் 565 பேர் கடந்த சனிக்கிழமை காங்கேசன்துறை வந்தடைந்தனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பல பகுதிகளையும் சேர்ந்த அகதிகள் இம்முறை வந்தனர். வடமராட்சியைச் சேர்ந்தவர்களே அதிகம் காணப்பட்டனர்.

அரச நிவாரணம் வழங்குவது இம்முறை மிக நுணுக்கமாக ஆராயப்பட்டு, போலிக்குடும்பங்களுக்கு நிவாரணம் குறைக்கப்பட்டது.

இம்முறை வழமையிலும் பார்க்க பொதிகள் மிகக் கூடுதலாக வந்திருந்தன. அதைவிட கைகளிலும் பல கைப்பைகள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### ஊர்காவலர் எண்ணிக்கை அதிகரிக்கும்

கொழும்பு, ஜூன் 20

ஊர்காவல் படையினரின் எண்ணிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் 20 ஆயிரமாக அதிகரிக்கப்படும்.

இப்படி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊர்காவல் படையில் தற்போது 14 ஆயிரம் பேர் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ–எ)

### 'ஹலோ'வுக்கு ஆயுபோவன்!

கொழும்பு, ஜூன் 20

'ஹலோ' என்று தொலைபேசியிலோ, நேரிலோ எவரையும் அழைக்கக் கூடாது. 'ஆயுபோவன்' என்றே கூறவேண்டும்.

புதிய கலாசார அமைச்சர் வி. ஜே. எம். லொக்குபண்டாரா தனது அமைச்சு அதிகாரிகளுக்கு முன்கண்ட உத்தரவை விடுத்திருக்கிறார்.

இந்த நடைமுறையைப் பின்பற்றி பாரம்பரிய கலாசாரத்தை வளர்க்க உதவும்படி ஏனைய அமைச்சர்களுக்கும் அமைச்சர் லொக்குபண்டாரா வேண்டுகோள் விடுத்திருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

[ஓ–எ]

முச்சந்தி முரளி



இருக்கும் இடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் செளக்கியமாக இருக்கும் எண்டு அம்மிக்கும் குளவிக்கும் விஷயம் புரிஞ்சிருக்குதுபோலே ...!

## பஸ்நிலைய போராட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

வடக்கு கிழக்கு பொது ஸ்தாபனங்களின் மன்றத்தினரால் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ் பஸ் நிலை

[6 ஆம் பக்கம் பார்க்க]

ஹரியாணு மாநில

## குருஷேத்திரத்தில் குண்டு வெடித்து 14பேர் பலி!

புதுடில்லி, ஜூன் 20

ஹரியாணு மாநிலத்தில் குருஷேத்திரத்தில் நேற்றுக் காலை பயங்கரக் குண்டு விபத்து ஒன்று இடம்பெற்றது.

அங்கு குண்டு வெடித்ததில் 14 பேர் உயிரிழந்தனர். 40 பேர் வரையில் காயமடைந்தனர் என அறிவிக்கப்படுகின்றது.

பிரதான சந்தைக்கு அருகில் உள்ள எலக்ரோனிக் கடை அருகில் இந்தக் குண்டு வெடித்தது.

அச்சமயம் மக்கள் திரளாகக் கூடி நின்று தொலைக்காட்சியில் 'இராமாயண்' படம் பார்த்துக்கொண்டுஇருந்தனர்.

குண்டு வெடித்ததைத் தொடர்ந்து அந்த இடத்திலேயே பத்துப் பேர் துடிதுடித்து மாண்டனர். ஆஸ்பத்திரியில் 4 பேர் இறந்தனர். சீக்கியத் தீவிரவாதிகளே இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

(ஓ–எ)

## சுடாநாட்டில் செஞ்சிலுவைச் சங்க தலைமையக அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூன் 20

செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகமான ஜெனிவாவிலிருந்து செஞ்சிலுவைச் சங்க உயரதிகாரியான திரு. இல்கா உசிராஜே வடபகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு இங்கு வந்துள்ளார்.

இவர் நேற்று வடக்கின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்ததுடன், பல முக்கியஸ்தர்களையும் சந்தித்து உரையாடினர்.

வடபகுதியின் புனர் நிர்மாணப் பணிகள் பற்றியும் உடனடி நிவாரணம் வழங்குவது பற்றியும் அவர் ஆலோசனைகளை மேற்கொண்டார்.

சமீபத்திய அசம்பாவிதங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவென 1,500 உணவுப் பொட்டலங்களை யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திடம் அவர் வழங்கினர்.

இன்று வடமராட்சிப் பகுதிக்கு சென்று பாதிக்கப்பட்ட இடங்களை திரு. இல்கா உசிராஜே பார்வையிட உள்ளார்.

(ஓ–9)

சுபநேரம்
20—6—1988
ஆனி —6
திங்கட்கிழமை
சுபநேரம்:
11.54 முதல் 1.24 வரை
ராகுகாலம்:
7.24 முதல் 8.54 வரை
ஷஷ்டி விரதம்

## கார் மீது சூடு; ரெலோ உறுப்பினர் பலி

வவுனியா, ஜூன் 20

வவுனியாவைச் சேர்ந்த கல்குண்டான்மடு எல்லைப் புறப்பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சம்பவம் ஒன்றின்போது வாடகைக் கார் சாரதி ஒருவரும், ரெலோ இயக்க உறுப்பினர் ஒருவரும் பலியானர்கள். மேலும் இருவர் படுகாயமடைந்தார்கள்.

வாடகைக்கார் சாரதி வவுனியா மாறம்பைக் குளத்தைச் சேர்ந்த க. அம்மாசி (27) என்றும் ரெலோ இயக்க உறுப்பினர் ரஞ்சன் (மாணிக்சம் ராஜேந்திரன் (23) திருகோணமலை) என்றும் அடையாளம் காணப்பட்டது.

இவர்களது சடலங்கள் சனிக்கிழமை வவுனியா ஆஸ்பத்திரி பிரேதஅறையில் வைக்கப்பட்டிருந்தன.

சம்பவம் பற்றி ரெலோ இயக்கப் பேச்சாளர் ஒருவர் கூறியதாவது:–

கொலையுண்ட ரஞ்சனுடன், அலக்ஸ், நேசன் என்ற இரண்டு ரெலோ உறுப்பினர்களும் சேர்ந்து மூவருமாக வாடகைக் கார் ஒன்றில் கல்குண்டான்மடு பகுதியில் நிராயுதபாணிகளாகப் பிரயாணம் செய்துகொண்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### 30 பேர் பலி

புதுடில்லி, ஜூன் 20

மீரட் நகரில் நேற்று அரசு பஸ் ஒன்று வெடித்துக்குள்ளாகியதில் 30 பயணிகள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

[ஓ–எ]

"யாழ்ப்பாண நகரம் அழிந்து விட்டது: ஷெல் பட்டுச் சேதமடையாத வீடு இல்லை"

# 50,000 பேருக்கு உணவு தேவை

## செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தலைமை அலுவலகத்துக்கு அறிக்கை

— அலுவலகச் செய்தியாளர்: எஸ். ராஜ்குமார் —

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணத்தில் மூன்று மாதங்களுக்கு உணவு தேவைப்படும் நிலையில் ஐம்பதாயிரம் மக்கள் உள்ளனர்.

பத்தாயிரம் குடும்பங்களுக்கு புனர்வாழ்வு உதவி தேவைப்படுகிறது.

இவ்வாறு ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்துக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. செஞ்சிலுவைச் சங்கங்கள் லீக்கின் ஆசிய பசுபிக் பிரிவுத் தலைவர் டாக்டர் கிங்ஸ்லி சிவரத்தினம் என்பவரே இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்.

டாக்டர் சிவரத்தினம் கடந்த ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

1983இல் இன மோதல்கள் ஆரம்பித்த பின்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த முதலாவது சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி டாக்டர் சிவரத்தினம் ஆவார்.

யாழ் விஜயத்தை முடித்துக் கொண்டு லீக்கின் தலைமை அலுவலகத்துக்குத் திரும்பிய டாக்டர் சிவரத்தினம் தலைமையகத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் பின்வருமாறு அறிவித்திருக்கிறார் :–

நகரம் அழிந்து விட்டது. ஷெல் தாக்குதல், துப்பாக்கிப் பிரயோகத்தில் சேதப்படாத, அழியாத ஒரு வீட்டையும் நான் காணவில்லை.

ஆதரவற்றவர்களுக்கு அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதான நிவாரணத் திட்டம் ஒன்றை ஒழுங்கான முறையில் யாழ். செஞ்சிலுவைச் சங்கம் செயல் படுத்தி வருகிறது.

மூன்று மாதங்களுக்கு உணவு தேவைப்படும் நிலையில் 50 ஆயிரம்பேர் உள்ளனர் என்றும்,

பத்தாயிரம் குடும்பங்களுக்கு புனர்வாழ்வு உதவி தேவைப்படுகிறது என்றும்,

ஆயிரம் அனுதை மற்றும் நிர்க்கதியான குழந்தைகளைப் பராமரிக்க வேண்டியுள்ளது என்றும் செஞ்சிலுவைச் சங்கக் கிளை அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

யாழ். கிளையினர் அடையாளங்கண்டுள்ள ஏனைய தேவைகள் வருமாறு;

வறியவர்களுக்குள் வறியவர்களான 2,000 குடும்பங்களுக்கு வீடுகள் தேவைப்படுகின்றன.

அவசர வைத்திய சேவைகளைச் செய்து கொடுக்க நடமாடும் வைத்திய யூனிட்டுக்கள் தேவை.

சண்டை காரணமாக பாதிக்கப்பட்ட 2,000

[6 ஆம் பக்கம் பார்க்க]

### ரெலோ அலுவலகம் தகர்ப்பு

வவுனியா பஸ் நிலையத்திற்கு எதிரில் மேல்மாடி ஒன்றில் அமைந்திருந்த 'ரெலோ' அலுவலகம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

மாற்று இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்களே கட்டடத்துக்கு குண்டு வைத்தனர் என்று ரெலோ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

[ஓ – 164]

தென் இலங்கையில்

## ஜே. வி. பி.யினரின் வானெலி சேவையில்!

கொழும்பு, ஜூன் 20

மக்கள் விடுதலை முன்னணி தென் இலங்கையில் ஒலிபரப்புச் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சென்ற வார ஆரம்பத்தில் இருந்து இவ்வானெலி செயல்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சேவை ஆரம்பிக்கப்படுவது பற்றி அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களில் துண்டுப் பிரசுரங்கள் மூலம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

எந்த அலைவரிசையில், என்ன நேரத்தில் ஒலிபரப்பு இடம் பெறும் என்ற விவரங்கள் துண்டுப் பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

ரோஹன விஜேவீராவின் பேச்சுக்கள் இந்த வானெலியில் ஒலிபரப்பப்படுகின்றன. (ஓ–எ)

### அம்மியும் குளவியும் பயணம்!

காங்கேசன்துறை, ஜூன் 20

தமிழ்நாட்டிலிருந்து ஓர் அம்மியும், குளவியும் யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்தன!

அதுவும் விசேட கப்பலில் வந்தன!!

என்ன, ஆச்சரியப்படுகிறீர்களா?

தமிழ்நாட்டிலிருந்து கடந்த சனிக்கிழமை காங்கேசன் வந்த அகதிகள் கொண்டு வந்த பார்சல்களில் ஒன்று அதிகாரிகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது.

நீள்சதுர வடிவமான சிறிய பார்சல் ஒன்று தூக்கிச்செல்ல முடியாதவாறுமிகவும் பாரமாக இருந்ததால் அதிகாரிகள் அது பற்றி ஆராய்ந்தனர்.

[6-ஆம்பக்கம் பார்க்க]

### தூதுவருக்கு தெரியாதாம்!

கொழும்பு, ஜூன் 20

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் பெர்னுட் திலகரத்ன கொழும்பு திரும்பினர்.

அவர் புதுடில்லியில் இருந்து புறப்படும்வரை இந்திய அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் உடன்பாடு பற்றி அவருக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டது.

(ஓ–எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★சின்னஞ் சிறு விளம்பரம்★

## விற்பனைக்கு

சகல விதமான T. V றேடியோ, பூஸ்டர் அன்ரனு வயர் சுவர் கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், மின் விசிறிகள், சைனு மின் அடுப்புகள், T. V ஸ்ராண்ட் றைஸ் குக்கர் மற்றும் எலக்ரிக் வயறிங் பொருட்கள், பெற நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road Jaffna (C5482)

நல்லூர் ரோயிலுக்கு அருகாமையில் சுற்றுமதிலுடன் இரண்டு பரப் புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு செ. நடராசா 111 பருத்தித்துறைவீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (4677)

தரமான இறைச்சிக் கோழி (Broilar) விருத்துக் கோழி, முட்டைக் கோழி, நல்ல நிலையிலுள்ள CD-90 Honda CC நம்பருடன் (3மாதம் மட்டும் பாவிக்கப்பட்டது) சகலதஸ்ஜாவேஜுக்களுடனும் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க செ. ரங்கன் சந்திரசேசர பிள்ளையார் கோவிலடி கல்வியங்காடு. (4494)

இங்கிலாந்தில் இருந்து தருவிக்கப்பட்ட நாலு சில்லு கதிரை (Wheel Chair) விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள A. S. Bastian 222, Stanley Road Jaffna. (4489)

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெண்காய விதை விற்பனைக்குண்டு. [4673]

பழைய செம்புபித்தளை அலுமினியம் உயர் விலைக்கு பெறப்படும். [4674]

## கோழிக்குஞ்சு

ஒருநாள் Shetna Farm B, 380 (Bab - Cock) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், கறுப்பு சாவற் குஞ்சுகள் 08-07-88 விநியோகிக்கப்படும். 3 கிழமைக்கு முன் முற்பணம் செலுத்தி பதிவு செய்பவர்களுக்கு சேவற் குஞ்சுகள் விலை 6/75, விபரங்களுக்கு R.S.K Farm முருசபதி [டச்சு ரோட் மான்ஸ் பாடசாலைக்கு அருகாமை[ உடுவில் (2) குபேரன் ரோஸ், கொக்குவில் சந்தி, கொக்குவில். (4680)

ஒருநாள் சென்னு பிறவுண், பிரிமா லோமன் பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 21-6-88லும் 22-6-88 லும் விநியோகிக்கப்படும். ஒருநாள் கறுப்பு சேவற் குஞ்சுகள் 24-6-88லும் 28-6-88 லும் விநியோகிக்கப்படும். விபரங்களுக்கு

(1) R.S.K.Farm 'முருகபதி' [டச்சு ரோட் மபன்ஸ் பாடசாலைக்கு அருகாமை] உடுவில். (2) குபேரன்ஸ்ரோஸ் கொக்குவில் சந்தி கொக்குவில். 4679

## SALE

Six English Type-Writers For Sale, Contact, Arasaratnam, "Bethel" 3, Off Somasundaram Avenue Chundukkuly, Jaffna.(4668)

Sale Representatives Leding Business Establishment Situated in Jaffna town Requires. The Servicees of Experienced Representatives with an Exceallant Command of the English S. T Language Apply Before 30th June 1988, C/o 238, Uthayan, Jaffna. (4675)

## தேவை

அரசாங்க ஊழியர் யாழ் நகரத்திலிருந்து மூன்று மைல்கள் சுற்றுடலில் சிறு வீடு அல்லது அறை வாடகைக்கு தேவை முகவரி. C/o 165, உதயன் யாழ்ப்பாணம். (4492)

சித்திர வேலைகளில் ஆர்வம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ளவும். "கவிதா" 245, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். (C4909)

மருந்து வியாபாரத்தில் ஆர்வமுள்ள அனுபவமுள்ள பெண்கள் Sales Girls ஆக கடமையாற்றத் தேவை. மாநகரசபைஎல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்ப முடிவுத் திகதி 24-06-88 C/o 241, உதயன் யாழ்ப்பாணம். (C/4912)

### விற்பனையாளர்தேவை

சுன்னுகத்தில் புதிதாக ஆரம்பிக்கவுள்ள பாமஸிக்கு O/L சித்தியடைந்தவரும் ஐந்து வருட அனுமவமுள்ளவருமான ஒருவர் உடனடியாகத் தேவை. ST விண்ணப்பிக்கவும். C/o 239, உதயன் யாழ்ப்பாணம். (4676)

## கல்வி

ICMA/ AAT/ I. A. B/ Computer Programing வகுப்புகள் இப்பொழுதுதான் ஆரம்பமாகியுள்ளன, School of Business Administration 16, 3ம் குறுக்குத் தெரு. [O.L.R தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம் யாழ்ப்பாணம். (C5468)

City And Guilds OF London Institute Quantity Surveying 1989, வகுப்புகள் 1-7-1988 தொடக்கம் அற்லஸ் இன்ஸ்ரியூட் திருநெல்வேலியில் நடைபெறவுள்ளன. வகுப்புகள் யாவும் காலை 6. 30 8. 30 வரை நடைபெறும். 30-6-88ம் திகதிக்கு முன்பு அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளவும். (4663)

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக் கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road Jaffna (Samy & Co Shabra அருகாமையில். (C5300)

### தவறி விட்டது

ஜுலியா இராசமலர் ஏபிரகாம் ஆகிய எனது 187780667V அடையாள அட்டையும் 11027 இலக்கமுடைய பென்சன் வவுச்சரும் 07-06-88 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [4488]

### கலர்ப்படம்

உங்கள் கலர்ப்படச் சுருள்களை மைக்கிரோ சொம்பியூட்டர் மூலம் கொழும்பு - சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரதி செய்ய விரும்புகின்றீர்களா? Processing இலவசம் பிரதி P. C 4/50 Only Processing 25/- தரமாகவும் விரைவாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள. கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம். (4910)

... எல்லைக்குள் இருக்கும் A.V ரோட்டில் அமைந்துள்ள கண்டி வீதிக்கு அருகாமையிலுள்ள புதிய வீடு 4 படுக்கை அறை வசதியுடன் குளியலறை, மலசலகூட வசதியுடையதுமான, வேலையாட்கள், தங்குமிட வசதி (Quarters) இரண்டு Garageம் உடையதுமான நல்ல புதிய வீடு வாடகைக்கு உடனடியாக விடப்படும். தொடர்பு C/o 240, உதயன் யாழ்ப்பாணம். [4681]

இந்தியா சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மணமகளின் அதிநவீன தலை சோடனை நகைகளை வாடகைக்கு பெற்றுக் கொள்ள நாடுங்கள் கனகசபை தர்மகுலசிங்கம் "கணேஸ் வாசா" காரைநகர் மேற்கு வீதி, காரைநகர் முன்கூட்டியே ஓடர்களை அறியத் தரவும். (4658)

# மிது வீடியோ மூவிஸ்

எமது

நேற்றைய வெளியீடுகள்

(1) தங்கச் சுரங்கம் — சிவாஜி, பாரதி

(2) பட்டாக்கத்தி பைரவன் — சிவாஜி, ஸ்ரீதேவி

(3) அன்பு - சிவாஜி, பத்மினி

(4) பத்தாம்பசலி- நாகேஷ், ராஜஸ்ரீ

(5) கெட்டிக்காரன்- ஜெய்சங்கர்

(6) ஏக்நாத் (பாகம் 9)

இவை யாவும் ஒரிஜினல் பிரதிகள்

**மிது வீடியோ மூவிஸ்**

பிரதான வீதி, சித்தங்கேணி.

யாழ்நகரில்:

**சதீஸ் றெக்கோடிங் ஸ்ருடியோ**

எமது அடுத்த வெளியீடு:

சரத்பாபு, அம்பிகா நடித்த

'ரெண்டும் ரெண்டும் அஞ்சு'

(C-4916)

## 1 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி





இன்பத் தாய் மடியில்

| தயாபரன் | தனீஸ்வரன் | விஜிதரன் |
|---|---|---|
| 15 - 01 - 1965 | 15 - 01 - 1965 | 13 - 03 - 1967 |

அரக்கர்கள் முடிவில் 01 - 06 - 1987

திதி நாள் 19 - 06 - 1988

குடும்பம் சாக்கவென்று உதித்திரே தாய்மடியில்
குடும்பக் இடுககன் களையவென்று வளர்ந்திரே மண்மடியில்
கள்ளமில்லா உள்ளம் கொண்டு வளர்த்திரே ஊர் உறவை
குறிவைத்து கவுன் உமர்க நிசர் நிகரன்றோ
புல்லாட்டம் உதைபந்தாட்டம் அத்தனைக்கும் நீங்கள் நிகர்
புளியங்குளத்தில் வைதது புல்லர் கூட்டம் உமை வளைத்து
சகோதரர் மூவரையும் சாய்த்தனரோ சண்டாளர்
சாய்த்து விட்ட மூன்று முகத்தை சேர்த்தெடுத்து ஒன்றுக
எரித்தனரோ இனவெறியர் மூவரையும் ஓரிடத்தில்
எரியுது ஐயோ வாய் வயிறு பாயுது ஐயோ நெருப்பாறு எம்மிடையே
வாடுகிறோம் உம்மை எண்ணி தேடுகிறோம் உம் திரிமுகத்தை
குமுறும் எரிமலையை குளிரவைக்க வந்திடுவிர்.
மூவரின் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகிறோம்

அப்பா, அம்மா, அக்காமார், தம்பிமார், தங்கைமார்
உற்றுர், உறவினர், நண்பர்கள்

கம்பர் மலை கிழக்கு, வல்வெட்டித்துறை. (4632)

## 61-ம் நாள் நினைவஞ்சலி



இ. மாணிக்கம் பாலச்சந்திரன்

(கப்டன் தம்புகிளி)

| தாயின் அரவணைப்பில் | தாயகத்தின் அரவணைப்பில் |
|---|---|
| 24-05-1965 | 21-04-1988 |

ஓ....எம் அன்புச் சகோதரா
ஈழத்தமிழினத்தின் வாழ்வுரிமையை மறுத்து
மானத் தமிழ்க் குலத்தினை மண்டியிட வைத்த
பேரினவாதப் பாசிச அரசினை எதிர்த்து
போர்க் கொடி தூக்கிய புரட்சி வீரனே...

ஓ! ... எம் செல்வமே.
வேதனை இதயத்தை வாட்டிட்டாலும்
சோகம் நெஞ்சினை கவ்விட்டாலும் -நாம்
இன்றுபோல் என்றுமே சுதந்திர காற்றைச்
சுவாசிக்கும் வரை துயிலவே மாட்டோம்!
துயிலவே மாட்டோம்....!
துயிலவே மாட்டோம்...!!

20-6-88ம் திகதி அன்று அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

உன்பிரிவால் துயருறும்,
பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள்.

மயிலயதனை,
தொண்டமானாறு.

4631

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



(கைதடியூர்)

திருமதி பத்மநாதன் தங்கம்மா

திதி:
20-06-88

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05-11-1924: | 21-05-88: |

நீங்கள் எங்களை விட்டு பிரிந்து சென்றுலும். எங்கள் மனதில் உங்கள் நினைவுகள் என்றும் மாறுது. உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் பிரிவால் துயருறும்,
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மானுர் வளவு,
கைதடி.

(4630)

★ வியாபாரம் பெருக விளம்பரம் செய்க ★

# அறிவித்தல்

## G. C. E. (A/L) - 1988

க. பொ. த. (உயர்தரம்) - 1988

## முன் மாதிரிப் பயிற்சிப் பரீட்சை

## PROTO - TYPE PRACTICE EXAMINATION

பரீட்சை ஆரம்ப திகதி: 29-06-1988 ல் (போயா தினம்)

- ★ யாழ்ப்பாணம்—பரீட்சார்த்திகள்: அனைத்து முன்னணி கல்வி நிறுவனங்கள்
- ★ திருமலை, கிண்ணியா, மூதூர் பரீட்சார்த்திகள்: திரு. ரமணன் - சாந்திநிகேதன், வித்தியாலயம் விதி,
- ★ மட்டக்களப்பு, ஏறுவூர், செங்கல்லடி பரீட்சார்த்திகள்: திரு. சிறீரங்கன், திரு. யேசுதாஸன் (BOND மத்திய வீதி)
- ★ மன்னர், எருக்கலம்பிட்டி, பேசாலை, முருங்கன் பரீட்சார்த்திகள்: திரு. லோரன்ஸ் - சாஹிரா கல்விநிலையம்.
- ★ சல்முனை, மருதமுனை, கல்லாறு, களுவாஞ்சிக்குடி, சம்மாந்துறை பரீட்சார்த்திகள்: - திரு. சிறீதர் பிரதானவீதி, கல்முனை.
- ★ தம்பிலுவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, நிந்தாவூர் பரீட்சார்த்திகள்: திரு, அமீன் கல்விநிலையம்
- ★ முல்லைநகர் பரீட்சார்த்திகள்: (உங்கள் பாடசாலைகளில் தொடர்புகொள்க)
- ★ வவுனியா பரீட்சார்த்திகள்: - திரு. வேதலிங்கம் ஆசிரியர்.
- ★ கிளிநொச்சி பரீட்சார்த்திகள் - சாந்திநிகேதன், திரு. மரியதாஸ் இலும் ஆன இடங்களில் உடன் தொடர்புறுக.

பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி: 28-06-1988 (செவ்வாய்)

விபரங்கட்கு:

**EXAMINATION UNIT**

**BOND INSTITUTION**

58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஆண்டுதோறும் ஆரும் ஆண்டு. G.C.E.O/L, G.C.E.A/L முன் மாதிரிப் பயிற்சிப் பரீட்சை நடத்துபவர்கள்.

[C-4908]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை நலம் பாராட்டு

கொடிகாமம் திருநாவுக்கரசு கொத்தணி மூலாதாரப் பாடசாலையின் முன்னாள் துணை அதிபர் திரு. ந. வல்லிபுரத்தின் சேவை நலம் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது. கொத்தணி அதிபர் திரு. ச. சின்னத்தம்பி விழாவுக்கு தலைமை வகித்தார்,

இப்போதைய துணை அதிபர் திரு. க. கந்தையா கொத்தணி துணை அதிபர் திரு. கு. சிவசம்பு, திரு. எஸ். சுப்பிரமணியம் உட்பட பலர் பாராட்டுரைவழங்கினர். (இ-75)

புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கு

# 3 வருடங்களின் பின்னர் மீண்டும் மின்விநியோகம்

## உணவு விநியோகமும் ஆரம்பம்

புதுக்குடியிருப்பு ஜூன்20

புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு மூன்று வருடங்களின் பின் ஜெனரேற்றர் கொண்டுவரப்பட்டு மின் விநியாகம் ஆரம்பிக்கப்படுள்ளது. உணவு விநியோகமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

மூன்று வருடங்களுக்கு முன் திருத்த வேலையின் பொருட்டு புதுக்குடியிருப்பு வைத்திசாலையில் இருந்த ஜெனரேற்றர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டது

தொடர்ந்து நடைபெற்று வந்த அசம்பாவித சம்பவங்களினால் அதனை மீண்டும் இங்கு கொண்டுவர தயக்கம் காட்டப்பட்டது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி திரு. க. யோகேஸ்வர தேவன் ஆகியோர் எடுத்துக் கொண்ட முயற்சிகளினால் மீண்டும் ஜெனரேற்றர் கொண்டுவரப்பட்டு மின் விநியோகமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த அக்டோபர் மாதம் முதல் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நோயாளர்களுக்கான உணவு விநியோகமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-126)

## வீதியின் அவலம்

கோப்பாய், சட்டைப் பராய் பழைய வீதி, கவனிப்பாரின்றி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் சந்தைக்கு வரும் விவசாயிகள் பெரும் கஷ்டம் அடைகின்றனர். (இ72)

யாழ். மாவட்ட

## மினிசினிமா சங்கம் ஆணையாளருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன்20

மினிசினிமா நிலையங்கள்மீது தற்காலிகதடை விதிக்கப்பட்டு ஒருமாதகாலம் ஆகிறது. இத்தடை விதிப்பானது தமது வாழ்க்கைக்கு மினிசினிமாக்களின் வருமானத்தையே நம்பி இருந்தவர்களுக்கு ஒரு பேரிடியாக அமைந்து விட்டது.

அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட 'யாழ் மாவட்ட மினி சினிமா' சங்கம் யாழ் மாநகர ஆணையாளரிடம் சமர்ப்பித்த மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

'சமூகத்தைப் பற்றியோ, நாட்டுநிலைமை பற்றியோ 'எமது எதிர்கால இளம் சந்ததியினரின் நல்வாழ்வுபற்றியோ சிறிதும் சிந்தியாது ஒரு சில மினிசினிமா நிலையங்கள் நடந்து கொண்டதே இத்தடையுத்தரவுக்குக் காரணம் என்பதை நாம் உணர்ந்து கொண்டுள்ளோம்.

எமதுசங்கத்தின் சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக யாழ் மாவட்டத்திலுள்ள சகல மினிசினிமாக்களையும் ஒருஅமைப்பின்கீழ் கொண்டுவந்து செயற்படவுள்ளோம்.

எனவே கடந்தகால நிகழ்வுகள் மீண்டும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளும் பொறுப்பைச் சங்கம் ஏற்றுக் கொள்கின்றது.

ஆகவே முன்னரைப் போல எமது மினிசினிமாக்கள் இயங்குவதற்கு உங்கள் ஒத்துழைப்பை வழங்குமாறு வேண்டுகின்றோம்'.

இவ்வாறு மகஜரில் கோரப்பட்டுள்ளது. (இ-5)

## இளம் பெண் சுட்டுக் கொலை

வடமராட்சி, ஜூன் 20

கன்பொல்லையைச் சேர்ந்த இராஜ கிராமத்தில் இளம் பெண் ஒருவர் சனியன்று பட்டப்பகலில் இனந்தெரியாத சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கரவெட்டி, கன்பொல்லையைச் சேர்ந்த குட்டியப்பா மாடியோ (வயது 22) என அழைக்கப்படும் இளம் பெண்ணே கொலையுண்டவராவர்.

இதேவேளை வல்வெட்டித்துறை வாசியான குமாரசாமி பூமா (வயது 35) வெள்ளியன்று இரவு இனம் தெரியாத சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறியப்படுகின்றது. [ஒ-160]

## வட்டு கொத்தணி அதிபர் கூட்டம்

வட்டுக்கோட்டை, ஜூன்.20

வட்டுக்கோட்டைக் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் கொத்தணி அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை தலைமையில் இம்மாதம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை10மணியளவில் நடைபெறும். (இ-161)

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொது அறிவித்தல்

## புதிய மின்கட்டணம்

1-1-88 ஆம் திகதி தொடக்கம் மின் சக்தி எரிபொருள் அமைச்சின் பணிப்பின்பிரகாரம் கோப்பாய், உரும்பராய், அச்சுவேலி புத்தூர், நீர்வேலி பிரதேசத்தில்புதிய விகிதாசாரப்படிமின் கட்டணங்கள் அறவிடப்படும்எனப் பொதுமக்களுக்கும், மின்நுகர்வோருக்கும் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது. எனவே இவ்வுயர்ச்சியினைக் கருத்திற்கொண்டு மின் பாவனையாளர்கள் தங்கள் மின் நுகர்ச்சியை வீண் விரயம் செய்யாமல் கட்டுப்பாட்டுடனும், அளவுடனும் உபயோகித்துப் பணவிரயங்களைக் கட்டுப்படுத்துமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

### (1) வீட்டுப் பாவனைக்குரிய இறுப்புக் கட்டணம்

(1) இந்த இறுப்பனவு தனியார் வசிப்பிடங்களில் மின்சாரத்தை வீட்டுப்பாவனைக்காகப் பாவிப்பவர்களுக்கும் (11) அப்படியான வீடுகளில் 25% க்கு மேற்படாத இடப்பரப்பினை (ஆகக்கூடிய 400 சதுர அடி) ஏதும் வியாபாரம் அல்லது தொழில் நோக்கத்திற்காகப் பாவிப்போருக்கும் பொருந்தும்.

[அ] மாதாந்த நிலையான கட்டணம் ரூபா 5/-ம்
[ஆ] 1-10 அலகுகளுக்கு, அலகொன்றிற்கு -/60 சதமும்
[இ] 11-100 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா 1/10-ம்
[ஈ] 101-450 அலகுகளுக்கு, அலகொன்றுக்கு ரூபா 2/-ம் அத்துடன் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் எரிபொருட் சீராக்கல் கட்டணமும்.
[உ] 450 அலகுகளுக்கு மேல், அலகொன்றுக்கு ரூபா 2/50-ம் அத்துடன் எரிபொருள் சீராக்கல் கட்டணமும் அறவிடப்படும்.

மேலும்

(11) வியாபார நோக்கத்திற்காக அல்லது தொழில் நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் இடப்பரப்பிற்காக (25%) மேலதிகக் கட்டணம் கீழ்வரும் விகிதாசாரப்படி அறவிடப்படும்.

| | |
|---|---|
| 200 சதுர அடி வரையும் | ரூபா 30/- |
| 200-300 சதுர அடி வரையும் | ரூபா 40/- |
| 300-400 சதுர அடி | ரூபா 50/- |

### (2) சமய சம்பந்தமான இடங்கள், அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள் போன்றவற்றிற்கான இறுப்பு

இவை பகிரங்க வணக்கத்தலங்கள், இத்தலங்களுக்குள் அல்லது இத்துடன் சேர்ந்துள்ள இடத்திலுள்ள பூசகரின் வசிப்பிடம், சமூகசேவைப் பணிப்பாளரினால் சான்றிதழ் வழங்கப்பட்ட தர்மஸ்தாபனங்கள் முதியோர் அனாதை மடங்கள், வலது குறைந்தோர் விடுதிகள் போன்றவற்றுக்கான இறுப்பாகும்.

[அ] மாதாந்த நிலையான கட்டணம் ரூபா 5/-ம்
[ஆ] முதல் 150க்கு அலகுகளுக்கு அலகொன்றுக்கு -/60 சதமும்
[இ] 150க்கு மேற்பட்ட அலகுகளுக்கு அலகொன்றுக்கு ரூபா 2/-ம்

எரிபொருள் சீராக்கல் கட்டணமும் அறவிடப்படும்.

அல்லது

ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனங்கள், சமய வழிபாட்டுத் தலங்கள் போன்றவற்றிற்கான 1-3-85 ஆம் திகதி தொடக்கம் மீளாய்வு செய்யப்பட்ட இறுப்பின் பிரகாரம் வரையறுக்கப்படாமல் இச்சலுகையைப் பெற்று வந்தவர்களுக்கு 1987-ம் ஆண்டின் சராசரி மாதாந்த நுகர்ச்சியின் அலகுகளின் அலகொன்றிற்கு சதம் -/60 ம் (எரிபொருள் கட்டணமும் விலக்கப்பட்டுள்ளது) இச்சராசரிக்கு மேற்பட்ட அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 2/- ம் அதற்கான எரிபொருட் சீராக்கல் கட்டணமும் விதிக்கப்படும்.

### (3) வீதி வெளிச்சம்

பிரதேசசபையால் ஈடுசெய்யப்படும்

### (4) பொது நோக்கங்களுக்கான இறுப்பனவு

இவை கடைகள், அலுவலகங்கள், வங்கிகள், பண்டகசாலைகள், பொதுக் கட்டடங்கள், ஆஸ்பத்திரிகள், கல்வி நிறுவனங்கள், பொழுதுபோக்கு இடங்கள் மேலும் இதுபோன்ற இடங்களுக்குப் பொருந்தும்.

4-1. மதிப்பிடப்பட்ட தேவை 50 கே வி ஏக்கும் குறைவான வழங்கல்களுக்குப் பொருந்துவன.
[அ] ஒவ்வொரு அலகுகளுக்கும் அலகொன்றுக்கு ரூபா 2/-ம் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.
[ஆ] கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்
5 கே. வி. ஏ. வரையும் ரூபா 30/-
5 கே.வி. ஏ. தொடக்கம் 10 கே. வி. ஏ. வரையும். ரூபா 50/-
10 கே. வி. ஏ.க்கு மேல் 50 கே. வி. ஏ.க்கு குறைய ரூபா 150/-ம் அறவிடப்படும்.

4-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏ.க்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்குப் பொருந்துவன.
(அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 1/90 அத்துடன் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.
[ஆ] மாதாந்தம் பெறப்பட்ட உச்சத் தேவையின் கே. வி. ஏ. ஒன்றுக்கு ரூபா 125/- வீதப்படியும்.
[இ] நிலையான கட்டணம் ரூபா 200/-ம் அறவிடப்படும்.

### (5) கைத்தொழில் இறுப்பனவு

இவை முழுமையாகவோ அல்லது பிரதானமாகவோ தொழிற்சாலைகள், தொழிற்களங்கள், வார்ப்புச் சாலைகள், எண்ணை ஆலைகள், நூற்பு நெசவு நிலையங்கள், பம்பு நிலையங்கள், துறைமுக சப்பல் தங்குமிட நிர்மாணங்கள் மற்றும் இதனையொத்த கைத்தொழில் நிர்மாணங்களுக்கான மின் இரசாயன மின் இயக்க நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகும்.

5-1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏக்கு குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்.
[அ] ஒவ்வொரு அலகுகளுக்கும் அலகொன்றிற்கு ரூபா 2/- அத்துடன் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.
[ஆ] கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்
5 கே. வி. ஏ. வரையும் ரூபா 30/-
5 கே. வி. ஏ. தொடக்கம் 10 கே. வி. ஏ. வரையும் ரூபா 50/-
10 கே. வி. ஏ.க்கு மேல் 50 கே. வி. ஏ. குறைய ரூபா 150/-ம் அறவிடப்படும்.

5-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏக்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்கும் பொருந்தும்.
(அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 1.75 எரிபொருள் சீராக்கல் சட்டணமும்.
(ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத் தேவையின் கே. வி. ஏ. ஒவ்வொன்றிற்கும் ரூபா 125/- வீதமும்.
(இ) நிலையான கட்டணம் ரூபா 200/- ம் அறவிடப்படும்.

### (6) ஹோட்டல் இறுப்பனவு

இவை உல்லாசப் பிரயாண ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் அதனையொத்த இடங்களுக்குப் பொருந்தும்.

6-1 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏக்கு குறைவான வழங்கல்களுக்குப் பொருந்தும்.
(அ) அலகு ஒவ்வொன்றிற்கும் ரூபா 2.00 அத்துடன் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.
(ஆ) கீழ்வரும் விகிதாசாரப்படி மாதாந்த நிலையான கட்டணமும்
5 கே..வி.ஏ வரையும் ரூபா 30/-
5 கே.வி.ஏ தொடக்கம் 10 கே.வி.ஏ வரையும் ரூபா 50/-
10 கே.வி. ஏக்கு மேல் 50 கே.வி.ஏ க்குக் ,குறைய ரூபா150/- அறவிடப்படும்.

6-2 மதிப்பிடப்பட்ட தேவை 50 கே. வி. ஏக்கும் அதற்கு மேலுமுள்ள வழங்கல்களுக்குப் பொருந்தும்.
(அ) அலகுகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 1.85-ம் அத்துடன் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.
(ஆ) மாதாந்தம் பெறப்பட்ட உச்சத்தேவையின் கே. வி. ஏ. ஒன்றுக்கு ரூபா 125/- வீதப்படியும்.
(இ) நிலையான கட்டணம் ரூபா 200/- ம் அறவிடப்படும்.

### (7) தற்காலிக மின்விநியோகம்

(அ) அலகு ஒன்றிற்கு ரூபா 3/- ம் எரிபொருள் சீராக்கல் கட்டணமும்.
(ஆ) பொருட்களின் வாடகையாக, பெறுமதியின் 10%மும்.
(இ) கூலிகள், மேற்பார்வைக் கட்டணமும்.
(ஈ) நுகர்ச்சிக்கான ஒரு வைப்புப் பணமும் அறவிடப்படும்.
(உ) களியாட்ட விழா போன்ற தேவைகளுக்கு மதிப்பிடப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகமாக கே. வி. ஏ. ஒன்றுக்கு ரூபா 50/- அறவிடப்படும்.

### (8) பொது அறவீடுகள்

(1) (அ) புதிய நிறுவுதல்களுக்கு ஏற்கனவே உள்ள நிறுவுதல்களின் விஸ்தரிப்புகளுக்கும் முதல் சோதனை இலவசம்.
(ஆ) முதல் சோதனை திருப்தியளிக்கவில்லையாயின் ஒவ்வொரு மேலதிக சோதனைகளுக்கும்

| | |
|---|---|
| ஒரு நிலை நிறுவுதல் | ரூபா 50/- |
| மூன்று நிலை நிறுவுதல் | ரூபா 150/- |

(2) மானிப்பரிசோதனை

பாவனையாளரின் வேண்டுதலின் பேரில் மானிப் பரிசோதனை ரூபா 100/- (மானியம் செம்மை இல்லாத தன்மை 2 1/2 சதவீதத்தை விட கூடவோ அல்லது குறைவாகவோ காட்டுமேயானால் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும்.)

(3) கொடுப்பனவுகளின் தாமதத்திற்கான விதிப்பனவுகள்

பாவனையாளர் ஒருவரின் மின்சார விதிப்பனவுக் கணக்குகள் 30 நாட்களுக்கு மேல் நிலுவையாக உள்ள சந்தர்ப்பத்தில் அம் மின்சார விநியோகத்தை துண்டிப்பதற்குக் கட்டளை இடப்படும். துண்டிப்புக்கட்டளை இடப்படுமாயின் நிலுவைத் தொகையுடன் அதன் 10 சதவீத மேலதிகக் கட்டணமும் அத்துடன் துண்டிப்பு நடவடிக்கை எடுக்கும் கட்டணமாக ரூபா 100/- 00ம் அறவிடப்படும்.

(4) ஒழுங்கு விதிகளை மீறுவோர் மீது (மானிகளின் மாற்றங்கள் செய்தல், மானி முத்திரைகள், கட்அவுட் முத்திரைகளை சேதப்படுத்துதல இவை போன்றவை (அவர்களது மின்சாரம் துண்டிக்கப்படுவதுடன் ரூபா 2000/- விதிப்பனவு அறவிடப்பட்டு மானியின் பதியப்படாத மின்பாவனைக்காகக் கட்டணம் சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டு அக்கட்டணத்துடன் 25% மேலதிக கட்டணமும் அறவிடப்படும். மதிப்பீட்டு முறையும் காலமும் சபையின் தன்விருப்பு உரிமையைப் பொறுத்தது.

(5) சட்டவிரோத மின் விஸ்தரிப்புகளை, வேறு கட்டடங்களுக்கு (மீற்றர் மூலம்) கொடுத்தலுக்காக மேலதிகக் கட்டணமாக ரூபா 250/- அறவிடப்படும்.

(6) பாவனையாளர்களின் சொந்த விருப்பத்தின் பேரில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டபின் மீண்டும் விநியோகம் வழங்குவதற்கு கட்டணம் ரூபா 100/- அறவிடப்படும்.

(7) மின்சாரம் தடைப்படும்போது, சேவையின உருக்கியை மீளப் பொருத்துவதற்காக

| | | |
|---|---|---|
| ஒரு நிலைக்கு | ரூபா 10/- | |
| மூன்று நிலைக்கு | ரூபா 20/- | அறவிடப்படும் |

இதுவிடயமாக இன்னும் பூரண விளக்கம் தேவையாயின் கோப்பாய், உரும்பராய் அச்சுவேலி, நீர்வேலி, புத்தூர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

காலதாமதமாகச் செலுத்தப்படும் நிலுவைப் பணங்களுக்கு மேலதிகப் பணம் செலுத்த வேண்டியதுடன் துண்டிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட இருப்பதால் தயவுசெய்து மாதாந்த சிட்டைகள் வரும் வரையும் காத்திராமல் மாதாந்தம் தவறாமல் குறைந்தது ஒரு சராசரித் தொகையைக் காரியாலயத்திற்குச் சென்று செலுத்தி வருவதால் மேலே கூறிய மேலதிகப் பணமோ அல்லது துண்டிக்கவேண்டிய சந்தர்ப்பத்தையோ சுலபமாக விலக்கிக் கொள்ளலாம் எனவும் ஆலோசனை கூறவிரும்புகின்றேன்.

**கந்தையா குலேந்திரா**
விசேட ஆணையாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.

(C4097)

# தாதி-உதவிவைத்திய அதிகாரிகளுக்கான புதிய சம்பளத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

தாதிமார், உதவி வைத்திய அதிகாரிகளுக்கான புதிய சம்பளத் திட்டம்பற்றி சுகாதார அமைச்சு சுற்றறிக்கை ஒன்றைச் சகல சுகாதாரத் திணைக்களப் பிராந்திய அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இந்தப் புதிய சம்பளத் திட்டத்தின்படி புதிய பிரஸ்தாப ஊழியர்கள் பின்வரும் அடிப்படையில் தமது சம்பளத்தைப் பெறுவர்.

**தாதிகள் வகுப்பு 2பிரிவு ஆ**

21600-5X480-11X600—39600

தாதிகள் வகுப்பு 2 பிரிவு அ

27000-4X600-14X900—42000

**தாதிகள் வகுப்பு ஒன்று**

31200-8X900-10X1200-50400

தாதிகள் விசேட தரம்

36000-15X1200—54000

பதிவு வைத்திய அதிகாரிகளும், உதவிப் பதிவு வைத்திய அதிகாரிகள்.

தரம் 2

27000-4X600-11X900—39300

தரம் 1

31200-8X900-10X1200—50100

கடந்தவருட வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையிலேயே இந்தப் புதிய சம்பளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இதன்படி இந்தப் புதிய சம்பளத் திட்டம் 1988ஆம் ஆண்டு ஜனவரிமுதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கான நிலுவைகள் ஜூலைமாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படவுள்ளது. (இ-9)

# பாடசாலை அதிபர்களுக்கு ஜீ. சி. ஈ. விசேஷ பரீட்சை சம்பந்தமாக சுற்றுநிருபம்

வட்டுக்கோட்டை, ஜூன் 20

1987-ஆம் ஆண்டுக்கான ஜீ. சி. ஈ. சாதாரணதர விசேஷ பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 11ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் இந்த விசேஷ பரீட்சை சம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்றை வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம், பரீட்சைக்குப் பொறுப்பான பிரதம கல்வி அதிகாரி திரு. சு. கந்தசாமி ஆகியோர் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளனர்.

சுற்றுநிருபத்தில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன!-

★ இவ்விசேஷ பரீட்சைக்கு பரீட்சை நிலையங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகள் 2-7-88 தொடக்கம் 11-7-88 வரை பாடசாலையை மூடி அதற்குப் பதிலாக பதில் பாடசாலை நடத்தவேண்டும்.

★ பரீட்சை நிலையங்களாகத் தெரிவு செய்யப்படாத பாடசாலைகள் தொடர்ந்து பாடசாலையை நடத்தவேண்டும்.

★ பரீட்சை நிலையங்களாகத் தெரிவு செய்யப்படாத பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மேற்படி பரீட்சைக் கடமைக்குத் தெரிவாகி இருப்பின் அவர்களுக்கு கடமை லீவு அனுமதிக்கப்படும். (இ-161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில்

# மீளக் குடியேறியோருக்கு போதிய நிவாரணம் இல்லை

## அரச அதிபருக்குப் புகார்

கிளிநொச்சி, ஜூன். 20

1986 கலவரங்களில் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்கள் தற்போது கிளிநொச்சிக்கு மீண்டும் வந்து குடியமர்ந்து வருகிறார்கள். இவர்களுக்கான நிவாரணங்கள் சிரான முறையில் வழங்கப்படவில்லை.

கிளிநொச்சியில் பாதிக்கப்பட்ட கிராமங்களின் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஒன்றிணைந்து கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு மேற்கண்டவாறு புகார் செய்துள்ளன.

இது தொடர்பான மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசின் பிரசாரத்திற்கு ஆதரவாக மீளக் குடியமர்ந்தவர்களுக்கு ஆரம்பத்தில் முதல் கட்டமாக 1,000 ரூபாவும் இரண்டாம் கட்டமாக 2,000 ரூபாவும் வழங்கப்பட்டது.

ஆனால் தற்போதைய சுற்றறிக்கையின் படி மீளக் குடியமர்வோருக்கு ரூபா 4,000 வழங்கப்பட்டு வருகிறது.

ஆரம்பத்தில் மீளக் குடியேறியவர்கள் தங்களுக்கு 1,000 ரூபா குறைவாகக் கிடைத்ததையிட்டு வேதனைப்படுவதால் மேற் குறிப்பிட்டவர்களுக்கு சமமாக நிவாரணம் வழங்க ஆவன செய்யவேண்டும்.

இடம் பெயர்ந்த கிராமங்களிலிருந்து வேறு கிராமங்களில் தஞ்சம் புகுந்தவர்கள் வரட்சி நிவாரணத்தை தஞ்சம் புகுந்த கிராமங்களில் பதிவு செய்தால் அவர்களுக்கு மீள் குடியேற்ற நிவாரணம் மறுக்கப்பட்டுள்ளது.

ஆகவே உண்மையில் இடம் பெயர்ந்த கிராமவாசிகள் என்பது நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு மீள் குடியேற்ற நிவாரணம் அவர்களது சொந்த இடத்தில் வழங்க வேண்டும்.

வரட்சி நிவாரணம் மேலும் மூன்று மாத காலங்கள் கூடுதலாக அயல் மாவட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது.

அதே போன்று கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் மேலதிக வரட்சி நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-76)

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்:

# ஜொலிஸ்ரார்ஸ் அணிக்கு பிள்ளையார் சுற்றுக்கிண்ணம்

## ஆட்டத்தின் சிறப்பு வீரர் பிரபானந்தன்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். ஜொலியன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் யாழ். ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணி சாம்பியனாகி பிள்ளையார் சுற்றுக்கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

மேற்படி போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ். ஜொலியன்ஸ் விளையாட்டுக்கழக ''சிவப்பு'' அணியை, ஜொலிஸ்ரார்ஸ் அணி 3 விக்கெட்டுக்களினால் வென்றது.

கே. சாந்தகுமார் வீழ்த்திய 4 விக்கெட்டுக்களும், எஸ். பி. பிரபானந்தன் பெற்ற 47 ஓட்டங்களும ஜொலிஸ்ரார்ஸ் அணியின் வெற்றிக்கு வழிகோலின.

இந்த இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலியன்ஸ் அணி 37.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது.

கணேஸ் பஞ்சன் 40, ரி. சதீசன் 25, ஆர். மகிந்தா 22, சி. சூரியகுமார் 7, எம். ரவீந்திரா 12, தேவபாலன் 8 ஓட்டங்களைப் பெற்றனர்.

கே. சாந்தகுமார் 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், சண்தயாளன் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், எஸ். தபேந்திரன் 2 விக்கெட்டுக்களையும், எஸ். பி. பிரபானந்தன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி 38.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

எஸ். பி. பிரபானந்தன் 47, கே. பிரேம்நாத் 37, பி. பத்மபிரகாஷ் 17, எஸ்.பி.எஸ். இளங்கோ 17, எஸ். சுபேந்திரன் 8 ஓட்டங்களைப் பெற்றனர்.

எம். ரவீந்திரா, ரி. சஞ்ஜீவன், சி. சூரியகுமார ஆகியோர் முறையே 15, 19, 32 ஓட்டங்களுக்கு தலா இரண்டு விக்கெட்டுக்களையும், எஸ். ரி. அகிலன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் சிறப்பு வீரராக ஜொலிஸ்ரார்ஸ் அணிவீரர் எஸ். பி. பிரபானந்தன் தெரிவானார்.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடந்து முன்தினம் நடைபெற்ற இப்போட்டிக்கு டி. எம். வேதாபரணம், பி. ராஜீவன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

### பறக்கும் கழுகுகள் சாம்பியன

உடுவில் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற 'செற்அப்' முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் புன்னாலைக் கட்டுவன் பறக்கும் கழுகுகள் விளையாட்டுக் கழக அணி சாம்பியனானது.

இதன் மூலம் இந்த அணி மாவட்டப் போட்டியில் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளது.

உ-2

### தகர்ப்பு முயற்சி முறியடிப்பு

கொழும்பு, ஜூன் 20

கடந்த வாரம் கொழும்பில் சில பாலங்களைத் தகர்க்க எடுத்துக் கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் முயற்சியை பேலியகொடைப் பொலீஸார் முறியடித்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சந்தேக நபர் ஒருவரைப் பொலீஸார் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு நிலக் கண்ணி வெடிகளைப் புதைத்து வைத்து இப்பாலங்களைத் தகர்க்க முயற்சிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஒவ்வொரு நிலக் கண்ணி வெடியும் 20 கிலோ கிராம் எடை கொண்டது என்றும் அவற்றைப் பேலியகொடைப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வைத்து பொலீஸார் கைப்பற்றினர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

(ஓ-எ)

### மரம் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், ஜூன். 20

மரம் தறிக்கச்சென்றவர் மீது தறித்தமரம் வீழ்ந்ததால் அவர் மரணமானார்.

இந்த சம்பவம் வியாழக்கிழமை மானிப்பாயில் நடைபெற்றது.

மானிப்பாயைச் சேர்ந்த பொன்னு செல்லத்துரை [60 வயது] என்பவரே இறந்தவர் ஆவார்.

(இ-9)


180வது நாள் நினைவஞ்சலி



செல்வன் ப. யுகவரதன் (ராஜி)

ஆண்டவன் அழிப்பு: 02-01-1967.

அகால மரணம்: 25-12-1987.

திதி: 20-06-1988

மாதம் ஆறு சென்றாலும் மனம் ஆறமுடியாதது உன்நினைவு; நீ புத்திரனாய்ப்பிறந்து கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து நுண்ணறிவுநிறைந்து, திண்மை செறிந்து உற்றாரும் உறவினரும் நச்ச ஊரார் உன் உதவியை மெச்ச உன் உணவையும் மறந்து ஊரவர்க்கு உழைத்தாய்.

அஞ்சாது சென்றாய்

அவர் உடன் விடுவோமென்றார்.

அயலவர் உடல் விட்டாய் என்றார்.

உலகம் உய்ய உதித்த உத்தமன் பிறந்த நாள் நத்தார்.

நிலவுலகு நிலையாதென நீ நீத்தநாள் 25-12-87.

அவ்வுத்தமர் கொலைஞனையும் மன்னித்தார்.

இவ்வுத்தமன் கொலைஞரையும் மன்னிப்பேம்.

உன்பிரிதால் வாடும்,

அப்பா, அக்கா, மைத்துனர்,

மருமகள், உற்றார் உறவினர்கள்.

அண்ணுமலை வீதி,

(4612) சுதுமலை தெற்கு, மானிப்பாய்.



யாழ். மத்திய கல்லூரி

எங்கள் கல்லூரியில் பழைய மாணவர் சித்திரம் படிப்பதற்கு சித்திர ஆசிரியர் தேவை. க.பொ.த.உ/த. பரீட்சையில் சித்திர பாடத்தில் சித்தியடைந்தோரும், அதற்கு மேற்பட்ட தராதரமுடையோரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் 27-6-1988 திங்கட்கிழமை வரை அதிபரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

வே. பாலசுந்தரம்

(4491) அதிபர்.



90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



நடராசா நேசராசா

(ஜோய்ஸ் பார்மஸி உரிமையாளர்)

தாயின் மடியில் 1959 - 07 - 19    மண்ணின் மடியில் 1988 - 03 - 25

எல்லாருக்கும் இனியவன் ஈகையாளன்
எவர்மனத்தும் குடியிருக்கும் கனிந்த நெஞ்சன்
கல்லார்க்கும் கற்றவருக்கும் களிப்பையூட்டும்
காவியத்தின் நாயகன் போல் விளங்கும் தீரன்
வல்லாளன் எம்தலைவன் நேசராசா
வாழ்க்கைத் துணைவி மாலினியின் வழியை நோக்கி
கல்லாத மனத்தாரும் கரையும் வண்ணம்
காலனிடம் ஈசனடி சேர்ந்தார் வாழி!

இவர் மறைந்து மூன்று மாதம் நிறைவு பெறும் இன்னாளில் நாம் ஆறாத காதலுடன் அஞ்சலி செலுத்துகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

தகப்பன், தாய், சகோதரர், சகோதரிகள் மைத்துனர், மைத்துனி, மாமன், மாமி, மச்சான்மார், உறவினர்கள், நண்பர்கள்.

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு. (4605)



சங்கானை

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 3500 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தை சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து தபால உறையின் இடது பக்க மூலையில் வெற்றுச் சாக்குக் கேள்வி என எழுதப்பட்டு ''பொது முகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை,, என்ற முகவரிக்கு 24.6.88ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.

17.6.88.

C 4904



நாடுங்கள் !!

நினைவின் நீங்காத
நிகழ்வின் இனிமைகளில்,
தினமும் மனங்களிக்க
திறமைமிகு படம்பிடிக்க

SUN

Video Complex

★ National, Sony, J. V. C கமெரா-நவீன துணைக்கருவிகள் சேர் தொழில் நுட்பம்!

★ வண்ணத் தெளிவு - வடிவக் ''கலப்பு முறை''!

★ உண்மைக்கலை உணர்வு - உயர்ந்த நற்சேவை!

திருவிழா! கொண்டாட்டம்! திருமணம்! பிறந்தநாள்! புதுமனைப் புகுவிழா! பூவையர் புதுவிழா! பொது விழா நலம் பெற! படம்பிடிப்பவர்கள்:

சண் வீடியோ

கொம்பிளெக்ஸ்

பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்

(4297)



# மத்தியகிழக்கில்வேலைவாய்ப்பு

## சவூதி அரேபியா

பின்வரும் தொழில்களுக்கு உடனடியாக ஆட்கள் தேவைப் படுகிறார்கள்-

1) பார வாகன சாரதிகள் - 4 - 5 - 10 வருட அனுபவம் 600 SR-

2) விற்பனையாளர் (Salesman) - 1 திறமையான ஆங்கிலம் பேசக் கூடியவர்.

3) கணக்காளர் (உதவி) - 1 - 5 – 10 வருட அனுபவம் 700 SR.

4) களஞ்சியப் பொறுப்பாளர் - 1 - 5 – 10 வருட அனுபவம் 600 SR.

5) கூலியாட்கள் - 3 - திறமையான ஆங்கில அறிவுடன் நல்ல உடற்சட்டு உடையவர்களாய் இருக்கவேண்டும் 500 SR. 200 SR. F. A

6) குளிர்சாதனம்/திருத்துனர் சம்பளம் குறிப்பிடப்படவில்லை. REFRI GERATOR / AIRCONDITION MECHANIC

7) இலிகிதர் - 1 - ஏற்றுமதி இறக்குமதி சந்தைப் படுத்தல் 5–10 வருட அனுபவம் 700SR. 200SR. F.A அத்துடன் கம்பனி நிகர இலாபத்தில் 15% கமிஷன்.

சகல வேலையாட்களுக்கும் 200 S.R சாப்பாட்டு அலவுன்ஸ் வழங்கப்படும்

### குவைற்

| | |
|---|---|
| பாரவாகன சாரதிகள் (SCHAMAL) | 20 — 60 KD. |
| பாரவாகன சாரதிகள் | 15 — 50 KD. |
| போர்க் கிளிப் (FORK LIFT) ஓட்டுனர் | 30 — 50 KD. |
| கிளினர்கள் (வெளி) / கிளினர்கள் (உள்) | 160 — 80 KD. |
| கிளினர்கள் (விமான நிலையம்) / கிளினர்கள் (துறைமுகம்) | 160 — 30 KD. |
| வீட்டு சாரதிகள் | 10 — 40 KD. |

### சவுதி அரேபியாவிற்கு உடனடியான பயணம்

கூலியாட்கள் 40 — 325 SR சாப்பாடு தங்குமிடம் இலவசம்.

கீழ்க்குறிப்பிட்டவர்களுக்கு குவைற், சவுதி அரேபியா விசா வந்துள்ளது உடனடியாக காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| A. சிவசுப்பிரமணியம். | J 0089666 | — குவைத். |
| S. K. சிவதாசன் | H 0130418 | — உருத்திரபுரம் குவைத் கிளிநொச்சி |
| K. யோகநாதன் | H 0056402 | — உருத்திரபுரம் குவைத் கிளிநொச்சி |
| M.K குணபாலா | H 0289828 | நிச்சாமம் சங்கானை |
| K. குணசேகரம் | J 0389798 | சவூதி அரேபியா |
| S. ராஜ்குமார் | G 0243609 | சவூதி அரேபியா |
| V. கனகராசா | J 0188045 | சவூதி அரேபியா |

விண்ணப்பதாரர்கள் தங்கள் கடவுச்சீட்டுடன் 6 புகைப்படமும் கொண்டு எங்கள் யாழ்ப்பாணக் காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.

எமது பிரதான காரியாலயம்

DINESH

Manpower Agency

Labour Licence No. 583

COLOMBO 3

யாழ்ப்பாணத்திற்கான பிரதான காரியாலயம்

டில்கா மேல்மாடி

பஸ்நிலைய முன்பாக

யாழ்ப்பாணம்

(4625)



இரண்டாம் வருட நினைவு நாள்



திருமதி. து. யோகலக்ஷ்மி

திதி 20-6-88

தோற்றம்: 17-2-36    மறைவு: 11-07-86

அன்னாரின் ஆத்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாயகன் K.V. துரைசாமி J.P.
பிள்ளைகள், மருமக்கள்.

''லக்ஷ்மி திலகம்''
மயிலிட்டி,
காங்கேசன் துறை.

4653


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

கற்றுக்கண் அஞ்சான்
செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது.

**பொருள்:**

கற்பன கற்று, பிறருடைய பகையான பார்வைக்கு அஞ்சாமல், கேட்பவர் உள்ளத்தில் பதியுமாறு சொல்லி, காலத்திற்குப் பொருத்தமானதை அறிகின்றவனே தூதன்.


# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

இல:– 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22072

20–06–1988 த. பெ. இல. 22


## காற்றில் பறக்கும் கனவான் தனம்!

இலங்கை—இந்திய அமைதி ஒப்பந்தத்தின்கீழ் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சட்டமா அதிபர் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலைக் கொழும்பில் வெளியிட்டிருக்கிறார்.

ஏற்கனவே குற்றப் பத்திரிகைகள் தொடரப்பட்டவர்கள் மீதான வழக்கு விசாரணைகள் தொடர்ந்து நடத்தப்படும். ஏனையவர்கள்மீது இருக்கும் பயங்கரவாதச் சம்பவங்கள் தொடர்பான சந்தேகங்கள் குறித்து இரகசியப் பொலிஸார் விசாரிப்பார்கள். இவ்வாறு அந்தப் பேச்சாளர் தகவல் கூறியிருக்கிறார்.

வடக்கில் இந்திய அமைதிப் படையினர் விடுவீடாகச் சென்று விநியோகிக்கும் துண்டுப் பிரசுரத்தில், அமைதிக்கும் நல்வாழ்வுக்குமான சான்றிதழில், உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கும் முதலாவது விடயம்—அம்சம் — பொதுமன்னிப்பு.

சட்டமா அதிபர் திணைக்களப் பேச்சாளரின் தகவல், துண்டுப் பிரசுரத்தில் உள்ள "பொது மன்னிப்பு" என்ற வாசகத்தைப் பார்த்துக் கேலியாகச் சிரிப்பதுபோல இருக்கிறதல்லவா?

இலங்கை – இந்திய அமைதி ஒப்பந்தம் தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி, உடனடியாக விடுதலை செய்ய வகை செய்கிறது. ஆனால் வருடம் ஒன்றாகப் போகும் நிலையிலும், பொதுமன்னிப்பு என்ற ஒரு விடயத்தில்கூட இலங்கை அரசு தனக்குள்ள கடமையைச் சரிவர, பூரணமாகச் செய்யவில்லை.

ஒப்பந்தத்தில் காணப்படும் அம்சங்களை, தமக்குத் தமக்குள்ள பொறுப்புகளை நிறைவேற்றும் கடமை இருநாட்டு அரசுகளுக்கும் உண்டு. இலங்கை அரசு நிறைவேற்றவேண்டிய பொறுப்புகளும் பணிகளுமே ஒப்பந்தத்தில் அதிகம்.

ஆனால் இலங்கை அரசு பொறுப்புகளை நிறைவேற்றுவதிலோ, கடமைகளைச் சரிவரச் செய்வதிலோ எவ்வித அக்கறையும் பேணவில்லை. தனது கனவான் தனத்தைக் காட்டவேண்டும் என்ற எண்ணம் அதற்குச் சிறிதும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒப்பந்தத்தில் இணங்கப்பட்ட அம்சங்களைமீறி நடப்பதில் மட்டுமே அது நாட்டம் கொண்டுள்ளது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தமிழ்ப் பகுதிகளில் நடத்துதல், வடக்கு – கிழக்கை இணையாதிருத்தல், தமிழை இன்னும் உத்தியோக மொழியாக்காது இருத்தல், இடைக்கால நிர்வாக சபையை அமைக்காதிருத்தல் ஆகிய ஒப்பந்த மீறல்களையே அது செயலில் காட்டி வருகிறது.

தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு அளிக்கும் விடயம் ஒன்றைத்தான் இலங்கை செயலில் காட்ட ஆரம்பித்தது. ஆனால் அதுவும் வெறும் பெயருக்குத்தான். கண்துடைப்புத்தான்.

நேரத்துக்கு நேரம் தனது போக்கை மாற்றிக்கொண்டு, 800 க்கும் மேற்பட்ட கைதிகளை இன்னும் சிறையிட்டு வைத்திருக்கிறது அது.

ஒப்பந்தத்தைக் கனவான் தனத்தோடு நிறைவேற்றவேண்டும். அதற்கு மதிப்பளித்துத் தனது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் இலங்கை அரசுத் தலைவர் ஜே. ஆருக்கு இருக்குமானால், தமிழ் அரசியற் கைதிகளை ஒரு நாளிலேயே விடுதலை செய்திருக்கலாம். ஆனால் ஒருவருடம் முடியப்போகும் நிலையிலும் விடுதலை செய்வதை இழுத்தடிப்பது ஒன்றே அவரது கனவான்தனம் காற்றில் பறக்கிறது என்பதை நிரூபிக்கப் போதுமானதாகும்.

இந்த லட்சணத்தில், ஈழத் தமிழர்கள் தங்கள் உரிமைப் போராட்டத்தை இடைநடுவில் நிறுத்திக்கொள்வது என்பது எப்படிப் பொருந்தும்?

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டம். இந்த இரண்டு வாசகங்களையும் நினைத்துக்கொள்வதை விட வேறு என்ன செய்யமுடியும் தமிழர்களுக்கு ...?

## ப. நோ. கூ. சங்க மாநாடு

காங்கேசன்., ஜூன் 20

யாழ், குடாநாட்டு ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள் பங்குகொள்ளும் மாநாடு ஒன்று புதன் 22ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். தேசிய கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளார்.

அலஹபாத் இந்திராகாங்கிரஸ் தோல்வி:

# ராஜீவ் ராஜினாமாச் செய்ய வேண்டும்; எதிர்க்கட்சிகள் கோரிக்கை

## இந்திய அரசியலில் புதிய திருப்பம்

### வி.பி.சிங் அறிவிப்பு

புதுடில்லி, ஜூன். 19

அலஹபாத் தேர்தல் முடிவு. இந்திய அரசியலில் புதிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

புதிய எம்பியாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. விஸ்வநாத் பிரதாப் சிங் இதனை தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் அறிவித்தார்.

தெலுங்கு தேசம் கட்சித் தலைவரும் ஆந்திர முதலமைச்சருமான என்ரி. ராமராவ் சொன்னதாவது;

மத்திய அரசின் கொள்கைகளை நிராகரித்து விட்டனர். பிரதமர் ராஜீவ்காந்தி மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்.

நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தல் ஒன்றுக்கு திரு. ராஜீவ்காந்தி உத்தரவிட வேண்டும்

இப்படி அவர் சொன்னார்.

அலஹபாத்தில் திரு. வி. பி. சிங் அடைந்த வெற்றி இந்திய எதிர்க்கட்சிகளுக்கு புத்துணர்ச்சியை அளித்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

பிரதமர் பதவிக்கு திரு. ராஜீவ்காந்திக்கு எதிராக போட்டியிடக் கூடிய ஒருவர் கிடைத்து விட்டார் என்பதையே திரு. சிங் வெற்றி எடுத்துக்காட்டுகிறது என்று பி. பி. சி அரசியல் விமர்சகர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் தங்களுக்குள் கருத்து வேறுபாடு இன்றி ஒரு மனதுடன் செயல்பட்டால், 1987 இல் இந்திராகாந்திக்கு கொடுத்த எதிர்ப்பிலும் பார்க்க கூடிய எதிர்ப்பை திரு. ராஜீவ் அடுத்த பொதுத் தேர்தலில் எதிர்நோக்குவார் என்றும் பி. பி. சி தெரிவித்தது.

11 சட்டசபைத்தொகுதிகளுக்கும் 7 லோகசபைத் தொகுதிகளுக்கும் கடந்த வியாழன் இடைத் தேர்தல் நடந்தது.

அவற்றில் 5 லோகசபை, 10 சட்டசபைத் தொகுதிகளின் முடிவுகள் இதுவரை வெளியாகின. அவை வருமாறு;

லோகசபை - 07

அறிவிக்கப்பட்ட முடிவுகள் 05

இந்திரா காங்கிரஸ் – 02 ஜனதா – 02 லோக்தள். – 01 சுயேச்சை – 01

சட்டசபை 11

அறிவிக்கப்பட்ட முடிவுகள் - 10

இந்திரா காங்கிரஸ்–50 எதிர்க் கட்சிகள் - 05 (எ)

## செக். அரசு நடவடிக்கை

பிராக், ஜூன் 19

சமாதான மாநாடு ஒன்றில் கலந்துகொண்ட பத்துக்கு அதிகமான மேற்கு நாடுகளின் பிரதிநிதிகளை செக்கோஸ்லேவேகிய அரசு நேற்று வெளியேற்றியது.

சில செக்கோஸ்லவேகியப் பிரசைகளையும் விசாரணைக்காக பொலிஸார் தடுத்து வைத்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

## சோவியத் மாநிலத் தகராறு தீர்வு கோர்பச்சேவ் கையில்

மஸ்கோ, ஜூன். 19

சோவியத் யூனியனில் உள்ள அஸர்பைஜான், ஆர்மெனியா மாநிலங்களுக்கு இடையேயான பிரதேசத் தகராறு, சோவியத் தலைவர் மிக்செயில் கோர்பச்சேவின் கவனத்துக்குச் சமர்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தசமயம் அஸர்பைஜான் மாநிலத்துடன் உள்ள கரபா பகுதியை தங்கள் மாநிலத்துடன் சேர்க்க வேண்டும் என்று ஆர்மெனியா மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஆர்மெனியா மாநில நாடாளுமன்றமும் அதனை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கரபா பகுதியைத் திருப்பிக் கொடுக்க முடியாது. என்று அஸர்பைஜான் மாநில நாடாளுமன்றம் தீர்மானம்நிறைவேற்றியுள்ளது. (எ)

## லஞ்சம் வாங்கிய சோவியத் அதிகாரிக்கு மரணதண்டனை

மாஸ்கோ, ஜூன் 19

சோவியத் யூனியனின் உஸ்பெக்கிஸ்தான் மாநிலத்தின் மாநில அரசு அதிகாரி ஒருவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

லஞ்சம் வாங்கியதற்காகவே அவருக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டதாக சோவியத் செய்திப்பத்திரிகை 'ரூட்' நேற்று அறிவித்தது.

ஏற்கனவே இந்த மாநிலத்தைச் சேர்ந்த 3 அரசு அதிகாரிகளுக்கு லஞ்சம் வாங்கியதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டது தெரிந்ததே.

நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்ட அரசு அதிகாரி, கூட்டுப் பண்ணை ஒன்றின் தலைவராகக் கடமையாற்றி வந்தார் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

### வெளி உலகில்

## பலஸ்தீனியர் வீடு உடைப்பு; இஸ்ரவேல் பழிவாங்கல்!

ஜெருசலம், ஜூன். 19

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் வாழும் பலஸ்தீனியர்களின் கிளர்ச்சி தீவிரமடைந்து வருகிறது.

இஸ்ரவேல் ராணுவத்தினர் நேற்று மேற்குக் கரையோரப் பகுதிக்குச் சென்று, பலஸ்தீனியர்களின் வீடுகளை உடைத்துத் தரை மட்டமாக்கினர் என்று அறிவிக்கப்படுகிறது.

இஸ்ரவேல் இராணுவத்தினர் மீது பெட்ரோல் குண்டுகளை வீசியதாகக் கூறப்படும் பலஸ்தீனியர் அவ்வீடுகளில் வாழ்ந்து வந்தனர் என்று இஸ்ரவேல் அரசு தரப்பினர் காரணம் காட்டினர்.

வீடுகளை உடைப்பதில் ஈடுபட்ட இஸ்ரவேல் இராணுவத்தினருக்கு எதிராக பலஸ்தீனியர் அப்போது ஆர்ப்பாட்டஞ் செய்தனர். அப்போது இஸ்ரவேலிய இராணுவத்தினர் சுட்டனர். அதில் ஒரு பலஸ்தீனியர் உயிரிழந்தார். 14 பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## பத்திரிகை பறிமுதல்

அங்காரா, ஜூன். 19

குர்டிஷ் பிரிவினைவாத கெரில்லாத்தலைவர் ஒருவரின் பேட்டியைப் பிரசுரித்தற்காக துருக்கி அதிகாரிகள் டெய்லி நியூஸ் என்ற தினசரியின் நேற்றைய வெளியீட்டை பறிமுதல் செய்தனர்.

சுமார் 40 ஆயிரம் பிரதிகள் பறிமுதல் செய்யப்பட்டது.

பேட்டியின் முதல் பகுதியை டெய்லி நியூஸ் வெளியிட்ட தன் பின்னர்தான் அரசு இந்த நடவடிக்கையை எடுத்தது.

பேட்டியின் இரண்டாவது பகுதியைப் பிரசுரிக்கவேண்டாம் என்று அரசு பத்திரிகை நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டது.

ஆனால் பேட்டியைப் பத்திரிகை பிரசுரித்தது. (எ)

## துருக்கிப் பிரதமர் தப்பினார்

அங்காரா, ஜூன் 19

அரசியல் கூட்டம் ஒன்றில்பேசிக்கொண்டிருந்த துருக்கிப் பிரதமர் ஓஸாமீது நேற்று இனந்தெரியாத நபர் ஒருவர் சுட்டார்.

ஆனால் பிரதமர் காயப்படாமல் தப்பிக்கொண்டார். ஆனால் கூட்டத்தில் இருந்த வேறு பத்துப்பேர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (ஓ – எ)

## சமய சந்நிதிகளில்

### பன்றிக் கோட்டு பிள்ளையார் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன்20

வண்ணை – பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் அலங்கார உற்சவம் கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாட்களுக்கு இந்த உற்சவம் நடைபெற்று எதிர்வரும் 22 ஆம் திகதி புதன் கிழமை தீர்த்த உற்சவமும்' 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைரவப் பெருமானுக்கு விசேஷ பூஜையும் நடைபெற உள்ளது.

### ஒட்டுசுட்டானில் வருடாந்த மகோற்சவம்

ஒட்டுசுட்டான், ஜூன்20

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பதினறு திருவிழாக்கள் நடைபெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ–113)

### கைதடி கந்தசுவாமி கொடியேற்றம்

கைதடி., ஜூன். 20

கைதடி கயற்றசிட்டி அருள் மிகு கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று 20ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், 29 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ–கி)

### அலங்கார திருவிழா

காரைநகர் கிழவன் காடு அருள் மிகு ஸ்ரீ கந்தசாமி கோவில் விபவ வருஷ அலங்காரத் திருவிழா ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்து தினங்களுக்கு திருவிழா நடைபெறும். (இ-73)

### அலங்கார உற்சவம்

சாவகச்சேரி, ஜூன்20

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் 23 ஆம்திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

ஜூலை2ஆம்திகதிசனிக் கிழமை 1008 சங்காபிஷேகம், ஊஞ்சல், முத்துச்சப்பறத்தில் அம்பாள் வீதிவலம் என்பன நடைபெறும். (இ–31)

### முருகமூர்த்தி திருக்கோவில் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன்20

சரவணை – பள்ளப்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும். 29 ஆம் திகதி தீர்த்தமும், 30 ஆம் திகதி திருக்கல்யாண விழாவும் நடைபெறவுள்ளன. (இ–9)

### துர்க்காதேவி உற்சவம்

சாவகச்சேரி, ஜூன்20

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் [illegible] இம்மாதம் 24 ஆம் [illegible] (இ–31)

### சங்கரநாத விநாயகர் தேர்

அனலைதீவு, ஜூன். 20

அனலைதீவு சங்கரநாத விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், 22 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (சி–18)

### சங்காபிஷேகம்

வடமராட்சி, ஜூன்20

அச்சுவேலி வருணன் அருள்மிகு காளிகா சமேத வீரபத்திரப் பெருமான் ஆலய அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. (இ–160)

### கொடியேற்றம்

யாழ்ப்பாணம் ஜூன் 20

தென் புலோலியூர் அருள்மிகு புற்றளை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் (ஓ)

### பொங்கல் வருடாந்த உற்சவம்

கோப்பாய், ஜூன். 20

பனைதம்பகாமம் அருள்மிகு செருக்கச்சாட்டி முத்துக்குமாரி அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

28 ஆம் திகதி காலை [illegible] (இ–72)

## இன்பருட்டியில் ஐஸ்கட்டி தொழிற்சாலை

### போரூட் ஸ்தாபனம் நடவடிக்கை

வடமராட்சி ஜூன் 20

இன்பருட்டி மீனவர்களுக்கு ஐஸ் கட்டித் தொழிற்சாலை ஒன்றை நிறுவிக்கொடுக்க போரூட்ஸ்தாபனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

போரூட்ஸ்தாபனம்தற்போது வடமராட்சியில் ஆதிகோவிலடி தொண்டமானாறு, இன்பருட்டி சுப்பர் மடம் போன்ற இடங்களில் மீனவர்களுக்கென பல திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

இதன் அடிப்படையிலேயே இன்பருட்டியில் மீனவர்களுக்கு ஐஸ்கட்டித் தொழிற்சாலையைக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இன்பருட்டியில் நடைபெற்ற மீனவருக்கான ஐக்கிய நாணயச் சங்கத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட போரூட் ஸ்தாபன யாழ் பொறுப்பதிகாரி எஸ். ஆனந்தராஜன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் மீனவர்கள் தங்களுக்கு நேரும் இன்னல்களைத் தாங்களே களைவதற்கு இப்படியான ஐக்கிய நாணயச் சங்கங்கள் அவசியம் என்று தெரிவித்தார்.

ஐக்கிய நாணயச் சங்கத் தலைவர் திரு. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மற்றும் எஸ். கருணாகரன் எஸ். மாணிக்கவாசகர் ஆகியோரும் பேசினர். (இ'60)

### மாணிக்க வாசகர் குருபூசை

மண்டைதீவு. ஜூன் 20

மண்டைதீவு கிழக்கு வேப்பந்திடல் முத்துமாரியம்மன் ஆலயத்தில் 20 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணி அளவில் மாணிக்கவாசகர் குருபூசைவிழா சைவ வளர்ச்சிக் கழக ஆதரவில் அதன் தலைவர் திரு. ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும். (இ)

### விஸ்வ ·ாதேஸ்வரர் உற்சவம்

அராலி, ஜூன். 20

அராலி மேற்கு விசாலாட்சி சமேத விஸ்வநாதேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் 13ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

21 ஆம் திகதி செவ்வாய்கிழமை தேர்த்திருவிழாவும் 22 ஆம் திகதி அதிகாலை ஆனி உத்திர திருவிழா நடேசர் அபிடேகமும் நண்பகல் தீர்த்தத் திருவிழவும் நடைபெறும். (ஞ–12)

### நூல் நிலையங்களை தரம் உயர்த்த நிதி ஒதுக்கீடு

கொழும்பு, ஜூன். 20

பாடசாலை நூல் நிலையங்களை தரம் உயர்த்துவதற்கு 1–கோடி 65, லட்சம் ரூபா செலவு செய்யப்படும்.

இத்தகவலை சமீபத்தில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் கல்விச் சேவைகள் அமைச்சர் சமரவீர வீரவன்னி தெரிவித்தார். (இ–51)

### நூல்கள் அன்பளிப்பு

இந்திய அரசு யாழ். பல்கலைக்கழகத்துக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை வழங்கி உள்ளது.

யாழ் - பல்கலைக்கழக பதில் உபவேந்தர் பேராசிரியர் கே. கணேசலிங்கம் நூல்களை இந்திய தூதரக அதிகாரி திருமதி பிறிம்றோஸிடமிருந்து பெற்றுக்கொண்டார். (இ–51)

### தொடர் மதிப்பீடு பற்றி முழுநாள் கருத்தரங்கு

வட்டுக்கோட்டை, ஜூன். 20

யாழ். கல்வித்திணைக்களம் தொடர் மதிப்பீடு சம்பந்தமான முழுநாள் கருத்தரங்கு ஒன்றை நல்லூர் ஸ்தாபன அ. மி. த. க. பாடசாலையில் இம்மாதம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் தலைமையில் நடத்தவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல கொத்தணி அதிபர்களும் பிரதம கல்வி அதிகாரிகள் ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரும் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. வே சபாநாயகமும் பிரதம கல்விஅதிகாரியும் திரு கு சோமசுந்தரமும் மற்றும் அதிகாரிகளும் தொடர் மதிப்பீடு பற்றிய பூரண விளக்கத்தை வழங்குவார்கள். (இ–161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்னாரி சர்பத்

இது நரம்புத் தளர்ச்சி, சலக்கடுப்பு, மூலவியாதி, போன்ற உஷ்ண வியாதிகளைப் போக்கித் தாகசாந்தி தருகிறது.

**1 போத்தல் விலை: ரூபா 25/-**

கிடைக்குமிடம்:

**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**

இல. 5 (76), பெரியகடை, யாழ்ப்பாணம்.



# உதயன்

20 - 06 - 1988 திங்கட்கிழமை



## புஸ்பா நெல்லி ரசம்

விட்டமின் 'சி' சத்து நிரம்பியது தாகசாந்தி, பித்தம், ஒங்காளம் இவற்றை நிவர்த்தி செய்து இரத்தத்தை சுத்தி செய்கிறது.

**1 போத்தல் விலை: ரூபா 25/-**

கிடைக்குமிடம்:

**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**

இல. 5 (76), பெரியகடை, யாழ்ப்பாணம்.


## வவுனியாவிலும்........

(1ம் பக்கத் தொடர்ச்சி) சாக இந்திய அமைதிப் படையை சேர்ந்த இரு உயர் அதிகாரிகள் குருமண்காடு தலைமுகாமுக்குச்சென்றிருந்தனர்.

### கோஷங்கள்

"இந்தியாவில் பேச்சு வார்த்தை; இலங்கையில் தமிழ்ப் பகுதிகளில் தேடுதல் வேட்டையா?"

"இந்திய அரசே ஒப்பந்தத்தால் தமிழரின் அழிவை நிறுத்த முடிந்ததா?"

"எமது எல்லைப்புறத்தில் நடப்பதென்ன?"

"இலங்கை-இந்திய ஒப்பந்தம் எமது சுயநிர்ணய உரிமையை மறுப்பது ஏன்?"

"இலங்கை-இந்திய ஒப்பந்தம் மௌனமானது ஏன்?"

"இலங்கை-இந்திய ஒப்பந்தம் சிங்களக் குடியேற்றத்தை தவிர்த்ததா?"

"எமது பாரம்பரிய நிலத்தைப் பாதுகாக்க முடிந்ததா?"

"அரசியல் கைதிகளை விடுவிக்க முடிந்ததா?"

"எங்களுக்குத் தேவை அமைதி. இந்திய அரசே விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தையை உடனே தொடங்கு!"

இவைபோன்ற தமிழ், ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தி வந்ததுடன் கோஷிக்கவும் செய்தனர்.

### நகரினுள் வரத்தடை

அமைதிப் பேரணி வவுனியாநகரினுள்வருவதற்கும் இந்திய அமைதிகாக்கும் படையினரின் அலுவலகத்தில் மகஜர் ஒன்றைக் கையளிப்பதற்கும் இந்திய இராணுவத்தால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆயினும் வெள்ளி இரவு நகரில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்கள் காரணமாக வவுனியா நகரில் ஊர்வலம் நடைபெறக்கூடாது என்று ரெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அறிவித்திருந்தார்கள். இதனை வேறொரு தினத்தில் வைத்துக்கொள்ளலாம் என்றும் அவர்கள் ஆலோசனை தெரிவித்திருந்தார்கள்.

இதேவேளையில் அமைதி ஊர்வலத்திற்கு ஆதரவு தெரிவித்து புளொட் இயக்கம் வவுனியா நகரில் சுவரொட்டிகளை ஒட்டியிருந்தது.

### மகஜர்

வவுனியா மாவட்டத்திலுள்ள சகல பிரசைகள் குழுக்கள், கிராமோதய சபைகள், வர்த்தகர் சங்கம், வர்த்தகர் தொழிலாளர் சங்கம், தடுத்து விடுபட்டோர் புனர்வாழ்வுச் சங்கம் ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்தவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இவ்வூர்வலத்தில் மேற்படி அமைப்புகளின் பிரமுகர்கள் மகஜர் ஒன்றை வவுனியா இந்திய அமைதிப் படை அதிகாரிகள் ஊடாக இந்தியத் தூதுவருக்குக் கையளித்தனர்.

குருமண்காடு தலைமுகாம் அமைந்துள்ள இடத்தில் வைத்து வவுனியா நகரத்திற்குப் பொறுப்பான கொமாண்டர் பி. எஸ். பிஸ்ற் மேஜர் என். வேணுகோபால் ஆகியோரிடம் கையளித்தார்கள்.

பேரணியில் கொண்டு வரப்பட்ட துணியில் எழுதப்பட்ட சில சுலோகங்களும் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

மகஜரை ஏற்றுக் கொண்ட இரு அதிகாரிகளும் பொதுமக்கள் மத்தியில் பேசுகையில்—

பதற்றமான நிலைமை நிலவுகின்ற வேளையில் ஊர்வலத்தில் கலந்து கொண்ட சிறுவர்கள் பெரியோர்கள் பெண்களுக்கு ஏதேனும் அசம்பாவிதங்கள் கடைவீதியினுள் நடைபெறுமல் தவிர்ப்பதற்காகவும் பொதுமக்களிடம் இருந்து மகஜரைப் பெறுவதற்காகவுமே குருமண்காடு தலைமுகாமுக்கு வந்ததாகத் தெரிவித்தார்கள்.

இந்த மகஜரில் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை மேலதிகாரிகள் முடிந்தளவில் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை தங்களுக்கு இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள்.

மகஜரையும் சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் உடனடியாக உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பதாகவும் அவர்கள் உறுதியளித்தார்கள். அத்துடன் பொறுமையாகத் தமது பேச்சைக் கேட்ட பொதுமக்களை அமைதியாகக் கலைந்து செல்லுமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். (அ-164)

## பஸ் நிலைய-----

(1ம் பக்கத் தொடர்ச்சி) யப் பகுதியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மறியல் போராட்டமும் பொதுக்கூட்டமும் பிறிதொரு நாளுக்கு பின்போடப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. இ. சிவரத்தினம் தெரிவித்தார். (ஒ - 9)

## 50,000 பேருக்கு------

(1ம் பக்கத் தொடர்ச்சி) பேருக்கு செயற்கைக் கை, கால்கள் தேவைப்படுகின்றன,

யாழ் அரச அதிபருடன் நடத்திய பேச்சுக்களின்போது, யாழ்நகர ஆஸ்பத்திரி மற்றும் குடாநாட்டில் உள்ள மருத்துவ மனைகளில் தளபாட, உபகரண பற்றுக்குறை இருப்பது தெரிய வந்தது.

சண்டை நேரத்தில் காயமடைந்தவர்களுக்குப் பயன்படுத்தப்பட்ட மருந்து மற்றும் உபகரண வகைகள் மீளளிப்புச் செய்யப்படவில்லை.

மின்வெட்டுக் காரணமாக வைத்திய நிலையங்கள் பாதிக்கப்படுகின்றன. அவை இயங்க சொந்த ஜெனரேட்டர்கள் தேவைப்படுகின்றன.

இப்படி டாக்டர் சிவரத்தினம் சொன்னார்.

லீக்கின் பிரதிநிதிக் குழு ஒன்றை இலங்கையில் அமைக்கவே டாக்டர் சிவரத்தினம் பயணம் மேற்கொண்டிருந்தார்.

புனர்வாழ்வு மற்றும் சேவைகளில் ஈடுபட்டுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துக்கு உதவுமுகமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க லீக் ஒருங்கிணைப்பை ஆரம்பிக்கும் ஒரு கட்டமாகவும் அவரின் விஜயம் அமைந்தது. (அ-எ-9)

## கார் மீது....

(1ம் பக்கத் தொடர்ச்சி) டிருந்தனர்.

அப்போது மறைந்திருந்த சிலர் கார்மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

கார்ச் சாரதி சம்பவம் நடந்த இடத்திலேயே மரணமானார். தப்பியோடிய ரெலோ உறுப்பினர்களை தாக்குதல் நடத்தியவர்கள் துரத்தித் துரத்திச் சுட்டனர்.

காயமடைந்து காட்டுப் பகுதியில் கிடந்த ரஞ்சன் வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரும் வழியில் உயிரிழந்தார்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதனிடையில், படுகாயமடைந்த நேசன் அனுராதபுரத்திற்கு அனுப்பப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ - 164)

## விரிவுரையாளர் திடீர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன்20 சைக்கிளில் வந்தவர் விழுந்து மரணமானார்.

யாழ். தொழில் நுட்ப கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராகக் கடமையாற்றும் எம். திருநாவுக்கரசு (வயது 52) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

கடந்த சனிக்கிழமை ஊரெழு கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் இச்சம்பவம் நடைபெற்றது. இவரது மரணம் தொடர்பான விசாரணையை யாழ். பதில் நீதவான் திரு. க. கேசவன் நடத்தினார்,

மூளை அதிர்ச்சியினால் எற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ஒ-10)

## பல்கலைக்கழக மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்20 யாழ் பல்கலைக் கழக விஞ்ஞான மாணவ மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் ஒன்று இன்று நடைபெற உள்ளது.

இக்கூட்டம் காலை 11 மணியளவில் யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறும். (ஒ-9)

## அகதிகளின்....

(1ம் பக்கத் தொடர்ச்சி) கொண்டுவரப் பட்டிருந்தன. சைக்கிள்கள் அதிகமாகக் கொண்டுவரப் பட்டிருந்தன.

நடேஸ்வராக் கல்லூரி தற்காலிகமுகாம்நிரம்பி வழிந்தது. பொதிகளை ஒழுங்குபடுத்தி உரியவர்களின் பெயர்கள் பதிவதில் அதிகாரிகள் பெரிதும் சிரமப்பட்டனர்.

ஐக்கிய நாடுகள் புனர்வாழ்வு ஆணைக்குழுவின் தலைவர் திரு. சம்பத்குமார் நடேஸ்வரா அகதிகள் முகாமுக்கு வருகை தந்து அகதிகள் வருகை, பராமரிப்பு ஆகியவற்றைக் கண்காணித்தார். (ஒ-65)

## ✯ அரசின் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 20 வன்செயல் காரணமாக வேலைக்குச் சமுகமளிக்காத அல்லது வேலையை விட்டுச்சென்ற அரசு ஊழியர் விரும்பினால் மீண்டும் வேலைக்குத் திரும்பலாம்; அல்லதுஓய்வுபெற்றுக்கொள்ளலாம்.

இப்படி அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## அம்மியும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி) அப்போது அம்மியும், குளவியும் தமிழ்நாட்டிலிருந்து வந்திருந்த விடயம் அம்பலமானது! [ஒ-68]


## VACANCY

FOR THE POST OF

## Assistant Manager

Wanted an assistant manager with thorough knowledge in English. Previous experience in management and living in surrounding the Municipal area is preferable. Apply with all documents and with two refrees.

Salary: Negotiable
Age: 35 - 50 yrs
Closing date: 24-06-1988

Apply to: C/o. 242, UTHAYAN

(C4914)



## Roay Travellers

## சிங்கப்பூர்

ஆண்கள்: பொது உதவியாளர் (Hotel) சம்பளம் - 3000 + OT. 1500 = 4500

பெண்கள்: வீட்டுப் பணிப்பெண்கள் சம்பளம் - 3200/-

பாஸ்போட், 6 புகைப்படம் இவற்றுடன் வந்து சந்திக்கவும்.

**பிரயாண ஒழுங்குகள் 6 கிழமைகளில் நடைபெறும்.**

**21, 22-ந் திகதிக்கு முன்னர் சந்திக்கவும்**

முகவரி:

**J. J. JANETO**
**41, Station Lane,**
**Chavakachcheri.**

(4634)


## நினைவஞ்சலி



### பவளன் கிறிஸ்ரி

பிறப்பு : 09 - 08 - 1957
இறப்பு : 20 - 06 - 1986

நிலவை வான் பிரிந்திடப்புகினும் உன் நினைவை நாம் மறந்திடப்போமோ? — இவ்வுலகை விட்டுயிர் நீத்திகு அகவை பலவாய் செலினும், அன்பா! உன் உறவை மறவோம் தமிழுள்ளவரை மறவோம்.

**மனைவி, மகள், சகோதரி, நண்பர்கள், உறவினர்**

[4493]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 1907-10-01

உதிர்வு: 1987-06-20

திதி: 1988-07-08

### திருமதி சின்னத்தம்பி ஆச்சிக்குட்டி

(காலஞ்சென்ற இருபாலையூர் சுதேச வைத்தியர் வ. சின்னத்தம்பி அவர்களின் மனைவி)

அன்புடனும் பாசத்துடனும் எம்மை அரவணைத்து வளர்த்த தாயே! நீங்கள் எங்களை விட்டகன்று ஆண்டு ஒன்றுனாலும் நீங்கள் காட்டிய அன்பினையும், பாசத்தினையும், வழி நடத்தலையும் ஆண்டுகள் பல உருண்டோடினாலும் எம்மால் மறந்திட முடியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன் நினைவு கூரும்,

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**

'விஜயவாசம்'
யாழ்வீதி, காங்கேசன்துறை, [4621]

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து ஆறுமுகம்

கொக்குவில் கிழக்கு றெயில் ரோட்டைச் சேர்ந்த முன்னாள் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் சரவணமுத்து ஆறுமுகம் காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற சரவணமுத்து சின்னத்துரை, இராசலிங்கம், திருமதி அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம்சென்ற சிருட்பர் அருளம்பலம், திருமதி சரஸ்வதி சின்னத்துரை, திருமதி அன்னலட்சுமி இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் 20-6-88 திங்கள் பிற்பகல் 2. 00மணிக்கு றெயில் ரோட் கொக்குவிலில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ச. இராசலிங்கம்

(4499)

## மரண அறிவித்தல்கள்

### விக்கினேஸ்வரி சபாநடேசன்

மூளாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சபாரத்தினம் சிவபாக்கியம் தம்பதிகளின் ஏகபுதல்வி விக்கினேஸ்வரி காலமானார். இவர் கிரிப்பிட்டிய அரசினர் வைத்தியசாலை சபா நடேசன் R. M. P யின் அருமை மனைவியும் பகீரதன் யூனியன் கல்லூரி தெல்லிப்பளை, பிரதீபா மகளிர் கல்லூரி பண்டத்தரிப்பு ஆகியோரின் அன்புத்தாயாரும் கோபாலகிருஷ்ணன், வெற்றிவேல், பரஞ்சோதி, சபாநாதன் சிறிரங்கநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தெல்லிப்பளை இளைப்பாறிய சுகாதார பரிசோதகர் செல்லப்பா தம்பதிகளின் சிரேஷ்ட மருமகளுமாவார். அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை (20-06-88) பிற்பகல் 2. 00 மணியளவில் அவரது மூளாய் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்
**செ. சபாநடேசன்.**

(4639)

### மார்க்கண்டு திருநாவுக்கரசு

வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது ஊரெழு கிழக்கில் வசித்தவருமான மார்க்கண்டு திருநாவுக்கரசு (விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி யாழ்ப்பாணம்) காலமானார்.

அன்னார் சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சிந்துஜாவின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற தர்மலிங்கம், தர்மராஜா [கற்பகம்], இராஜேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், மகேஸ்வரி, காலஞ்சென்ற மகேந்திரன், காலஞ்சென்ற புவனேந்திரன், இராஜேஸ்வரி அம்மாள், பரமேஸ்வரி, இராமச்சந்திரன், பாலகிருஷ்ணன் (அரச அச்சகம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் [20-6-88] இன்று மாலை 2 மணியளவில் ஊரெழு பொக்கணை மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**திருமதி சிவனேஸ்வரி (குஞ்சு)**

(4637)

### ஆ. பாலாச்செட்டியார்

ஆ. பாலாச்செட்டியார் காலமாகிவிட்டார். வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கோப்பாய் வடக்கு பூதர்மடம் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செட்டியார் பாலசுப்பிரமணியம் 18-6-88 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். இவர் தில்லைநாயகியின் அன்புக் கணவரும்,ஆறுமுகவடிவேல்,இந்திரகுமார், விஜயகுமார், தயாநிதி, கலாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும் தனயோகம் செல்வநாயகி புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் கார்த்திகா ஜிந்துஷா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

ஈமக் கிரியைகள் 20-6-88 திங்கட்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் 3. 00 மணியளவில் நடைபெறும்.

தகவல் தருபவர்
அன்பு மகன்
**விஜயகுமார்**

(4495)

### சின்னத்தம்பி மாணிக்கம்

சின்னத்தம்பி மாணிக்கம் காலமாகிவிட்டார். இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும் நீலாம்பிகை, குலமணி(முல்லைஅச்சகம்), சுப்பிரமணியம் ஆகியோரின் தகப்பனாரும், சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஓவசியர்), புஸ்பமகான் மலர் ஆகியோரின் மாமனாரும், விவேகானந்தன் (S. P. S. நிறுவனத்தின் பங்காளர்), வசந்தன் (சவுதி), வசந்தி, வரதன் (யாழ். பல்கலைக்கழகம்), வரோதயன் [நோர்வே], வளவன், முல்லைஅபிராமி, சயீவன், சஞ்ஜீவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (20-6-88) இன்று காலை 10 மணிக்கு நயினாதீவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**சு. வளவன்**
நயினாதீவு
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[4496]


இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்டிற்காக யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 20- 06 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna Monday 20 th June 1988.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org